
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**923**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

**22**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# சாதியத்தின் மீது விழுந்த சம்மட்டி அடி!

லால்குடி வட்டத்தில் உள்ள 18 கிராமங்களுக்கு தலைக்கிராமம் பெருவளப்பூர். ஆறுகள், ஓடைகள், பரந்து விரிந்த வயல்கள் என பசுமையான கிராமம். ஆனால், 1940-களில் அங்கு வசதி இருப்போரும்கூட படித்ததில்லை. காரணம், படித்தால் சாஸ்திரங்களை மதிக்க மாட்டார்கள், சாதியை மீறுவார்கள் என்பதுதான். மறுபுறம் தாழ்த்தப்பட்டோர் செருப்பு அணியக்கூடாது, துண்டு போடக்கூடாது என்ற நிலையும் இருந்தது. அத்தகைய பிற்போக்கான கிராமத்துக்கு, அரசு மருத்துவராக வந்தவர் பாலகிருஷ்ணன்.

வெறும் மருத்துவராக மட்டும் அவர் வரவில்லை, சமூக மருத்துவரான பெரியாரின் கொள்கையில் ஊறியவராக வந்தார். மருத்துவமனைக்கு வருவோரை 'விடுதலை' இதழை வாசிக்க வைத்தார். பெருவளப்பூருக்குப் பக்கத்து கிராமமான சிறுகனூரில் மருத்துவமனை அமைந்திருந்தாலும், அடிக்கடி பெருவளப்பூர் சென்று மக்களோடு உரையாடினார். தனது 2 மகள்களையும் பெருவளப்பூரைச் சேர்ந்தவர்களுக்கே சாதி மறுப்பு - சுயமரியாதைத் திருமணம் செய்துவைத்தார். அத்தகைய கொள்கை வீரரால் பெருவளப்பூரில் திராவிடர் கழகக் கிளை உருவானது. அந்த பாலகிருஷ்ணனால் பெரியாரின் முரட்டுத் தொண்டராக உருவானவர்தான் பெருவளப்பூர் சாமிநாதன்.

15 வயதிலேயே சாமிநாதன் ஊரை எதிர்த்து, தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்குச் செல்வார். அவர்களோடு பழகுவார், அவர்கள் வீட்டில் உணவு உண்பார்.



ஒருமுறை அருகே உள்ள அகரம் கிராமத்தில் இருந்த தனது அக்கா வீட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு கோயில் திருவிழாவில் தீமிதி நிகழ்வு நடந்து கொண்டிருந்தது. வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சாமிநாதன் திடீரென 'கடவுள் இல்லை... கடவுள் இல்லை... கடவுள் இல்லவே இல்லை' என முழக்க மிட்டுக் கொண்டே தீக்குழியில் இறங்கி ஓடினார். பல நாட்கள் விரதமிருந்து பக்திப் பரவசத்தோடு தீமிதிக்க வந்த பக்தர்கள் அதிர்ச்சி அடைந்துவிட்டனர். பின்னர் அங்கிருந்தவர்கள் விரட்ட, ஓட்டம்பிடித்த சாமிநாதனை அருகே இருந்த உறவினர்கள் காப்பாற்றி அனுப்பிவைத்தனர்.




தொடர்ச்சியான செயல்பாடுகளால், சாமிநாதன் ஊரில் முக்கிய பிரமுகரானார். 1953-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டார். எதிர்த்துப் போட்டியிடக் கூட எவரும் முன்வரவில்லை. அதன் பிறகு, பல்வேறு புரட்சிகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். குறிப்பாக, பெரும்பாலான ஊர்களில் தலைப்பகுதியில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு இருக்காது. பெருவளப்பூரிலும் அப்படியிருந்த நிலையை மாற்றி, தலைப்பகுதியான மேற்குத் திசையில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பை அமைத்தார் **சாமிநாதன்**. அந்த மக்கள் அப்பகுதியை சாமிநாதபுரம் என்றே இன்றும் அழைக்கின்றனர். ஊர்க்குடியிருப்புக்கும், தாழ்த்தப்பட்டோர் பகுதிக்கும் சேர்த்து, பொதுவான ஒரு நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டி, அதிலும் சமத்துவத்தை ஏற்படுத்தினார்.

ஊரில் உள்ள ஏரியில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுப்பதற்கு அனுமதியில்லை. ஆனால், சாமிநாதன் தாழ்த்தப்பட்டோரை அழைத்துச்சென்று தண்ணீர் எடுக்கச் செய்தார். 'திருவாரூர்' தங்கராசு போன்ற பலரை அழைத்து வந்து பகுத்தறிவுப் பிரச்சாரங்களில் ஈடுபட்டார். பெரியாருக்கு சிலை வைத்தார். சாதி மறுப்புத் திருமணங்களைத் துணிந்து நடத்தி வைப்பார்.

பெரியார் கோட்டையாக மாறியிருந்த பெருவளப்பூரில் இருந்து, 1957-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்ட எரிப்புப் போராட்டத்தில் 12 பேர் கலந்துகொண்டனர். அவர்களில் சாமிநாதனின் நண்பர் வெங்கடாசலம், சிதம்பரம், மாணிக்கம், ஆழப்பன், முத்துசாமி ஆகிய 5 பேர் ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறையிலும் சீர்திருத்த ஆயுதமேந்திய பெருவளப்பூரின் வரலாறு நீளும்...

**...பயணிப்போம்.**

---

## தேர்தல் தறுவாயிலும் இலட்சியப் பணி!

கழக அணிச் செயலாளர் முன்னெடுப்பில், 'கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்' மற்றும் 'கலைஞர் நிதிநல்கை' திட்டத்தை, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளான நேற்று (07.08.2025) அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கழகத் தலைவர் அவர்கள்,தொடங்கி வைத்தார்.

இந்த புதிய முன்னெடுப்புகள் குறித்து, சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள, திராவிடர் தளம் அமைப்பின் அதி அசுரன், "திராவிடர் இயக்கத்தின் சமுதாயப் புரட்சி, அரசு நிறுவனத்தைப் பயன்படுத்தி தி.மு.க. நடத்திய சமுதாய மாற்றங்கள், இன்றைய 11.19% வளர்ச்சிக்கு வித்திட்ட அனைத்து மக்களையும் உள்ளடக்கிய திராவிடர் கருத்தியல் ஆகியவை பற்றிய ஆய்வுகள் மிக மிகக் குறைவு. திராவிடர் இயக்கம் குறித்த நிரந்தர ஆராய்ச்சி மய்யங்களும் இல்லை.

இந்தியப் பகுதியில் நடந்த சாதி ஒழிப்புச் செயல்பாடுகள், கருத்துகள் - பெண் விடுதலைச் செயல்பாடுகள், கருத்துகள் தொடர்பாக, இந்திய அளவில் நடத்தப்படும் பாடத் திட்டங்களில் பெரியாரியம் ஒரு கருத்தியலாக இன்னும் இடம் பெறவில்லை.

இந்திய அளவிலும் உலக அளவிலும் நடைபெறும் சமூகவியல், மானுடவியல், பாலின சமத்துவக் கருத்தரங்குகளில் திராவிடமோ, பெரியாரியமோ விவாதிக்கப்படுவதில்லை. என்னதான் நாம் தீவிரமாக இயங்கினாலும், ஆய்வு மற்றும் கல்விப் புலங்களில் திராவிடக் கருத்தியல் பதிவாகாமல் இருந்தால், எதிர்காலத் தலைமுறைகளுக்கு நமது வரலாறு தெரியாமலேயே போய்விடும்.

ஒரு சமுதாயப் புரட்சி இயக்கம்தான் இந்நிலை குறித்து, அக்கறை எடுக்க வேண்டும். அடுத்த சில மாதங்களில் தேர்தலைச் சந்திக்கப் போகும் ஒரு அரசியல் கட்சி இந்த நோக்கில் தனது கவனத்தைத் திருப்பி, கலைஞர் நிதிநல்கைத் திட்டத்தைத் தொடங்கியது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டமும் இதே அளவுக்கு ஒரு சமுதாயத்தின் எதிர்கால வெற்றிகளுக்கான அடிக்கல் ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தி.மு.க. இளைஞர் அணிக்கும் எமது மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்".எனப் பதிவிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்



### தந்தையைப் போல உழைக்க வேண்டும்!



கே.கே.காதர் பக்கீர்

2000-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடன் அண்ணா அறிவாலயத்தில் நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். பின்னர், தலைவர் அவர்களிடம் அன்றைய மதுரை மாவட்டச் செயலாளர் வேலுச்சாமி அவர்கள், என் தந்தை 'மிசா' வையை நம்பியைக் குறிப்பிட்டு, அவரது மகன் என என்னை அறிமுகம் செய்து வைத்தார். தலைவர் உடனே என்னை அருகில் அழைத்து, 'மிசா' வையை நம்பி போல கழகத்தில் செயல்பட வேண்டும். அவர் பெயர் சொல்லும் அளவுக்குச் செயல்பாடுகள் இருக்கவேண்டும்" என்று பாராட்டி, அறிவுரை கூறியது மறக்க முடியாத நிகழ்வு.

**- கே.கே.காதர் பக்கீர்,**
**47-வது வட்ட கழகச் செயலாளர்,**
**மதுரை மாநகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

**72**

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# திராவிட அரசின் சாதனை வீணர்களின் வேதனை!

***பிரதமர் மோடியால்தான் தூத்துக்குடியில் வின்ஃபாஸ்ட் மின்சார கார் தொழிற்சாலை வந்தது என்று தமிழிசை சவுந்தரராஜனும், தமிழ்நாட்டுக்கு எவ்வளவு முதலீடு வந்தது என்பது குறித்து, வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமியும் சொல்கிறார்களே?***

2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், வின்ஃபாஸ்ட் நிறுவனம் முதலீடு செய்து, 17 மாதங்களில் தூத்துக்குடியில் தன் உற்பத்தியைத் தொடங்கியிருப்பதன் மூலம், எடப்பாடி பழனிசாமியின் கேள்விக்கான பதிலை, தமிழிசை சவுந்தரராஜனே சொல்லிவிட்டார். இப்போது தமிழிசை சொல்லியிருக்கும் தகவலுக்கு வருவோம். தூத்துக்குடியில் புதிய விமான நிலையமும், துறைமுக விரிவாக்கமும் மோடி அரசால் நிறைவேற்றப்பட்டதால்தான், வின்ஃபாஸ்ட் நிறுவனம் முதலீடு செய்துள்ளது என்று பா.ஜ.க. ஸ்டிக்கரை, திராவிட மாடல் அரசின் சாதனை மீது ஒட்டுவதற்கு முயற்சிக்கிறார் தமிழிசை.

தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக 586 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான நிர்வாக ஒப்புதலை, மாநில அரசு வழங்கியதற்கான அரசாணை போடப்பட்ட நாள் 9-7-2010. அதாவது, கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போதுதான் அதற்கான முன்னெடுப்புத் தொடங்கப்பட்டுள்ளது. அப்போது நாட்டின் பிரதமராக இருந்தவர் டாக்டர் மன்மோகன்சிங். பிறகு, மோடி பிரதமராகி, தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி 10 ஆண்டு காலம் நடைபெற்ற நிலையில், எந்தவிதமான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்தபிறகு, 21-09-2021 அன்று வெளியிடப்பட்ட அரசாணையில்தான் 2010-இல் போடப்பட்ட அரசாணைப்படி அனைத்து விவரங்களையும் பரிசீலித்து, மேற்குறிப்பிட்ட அளவிலான நிலத்தை ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆஃப் இந்தியாவிடம் ஒப்படைப்பது என முடிவெடுத்து செயல்படுத்தப்பட்டது.



விமான நிலையங்களை அமைக்கவேண்டியது, ஒன்றிய அரசின் கடமை. அதற்கேற்ற நிலங்களைக் கையகப்படுத்தித் தர வேண்டியது மாநில அரசின் பொறுப்பு. பா.ஜ.க.வின் கூட்டாளியான அ.தி.மு.க. ஆட்சியில் அதற்கான எந்த நடவடிக்கையும் இல்லாத நிலையில், தூத்துக்குடியின் தொழில் வளர்ச்சியைக் கருதி, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது தி.மு.க. அரசுதான். அத்துடன், வின்ஃபாஸ்ட் நிறுவனம் தூத்துக்குடியில் ஏற்பட்ட பெரும் மழை - வெள்ள பாதிப்புக்குப் பிறகும் தன்னுடைய நிறுவனத்தை அமைத்ததற்கு காரணம், தமிழ்நாடு அரசின் தொழிற்கொள்கையும், தொழிற்கட்டமைப்பும்தான். தூத்துக்குடி, சென்னை, நெல்லை எனத் தமிழ்நாட்டில் புயல்-வெள்ளப் பேரிடர் பாதித்த எந்தப் பகுதிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு கருணை அடிப்படையில்கூட உரிய நிவாரணம் வழங்கவில்லை.

தமிழ்நாட்டில் அமைய வேண்டிய செமிகண்டக்டர் நிறுவனங்களை, மிரட்டி குஜராத்துக்குக் கொண்டு சென்ற ஒன்றிய அரசின் செயல்பாட்டை, பொதுமேடையிலேயே அம்பலப்படுத்தியவர் தமிழ்நாடு முதலமைச்சர். அவருடைய சளைக்காத உழைப்பும் தொழில்துறை அமைச்சர். மற்ற துறை அமைச்சர்கள் ஆகியோரின் முயற்சியும் உலகப் புகழ்பெற்ற தொழில்நிறுவனங்களை, தமிழ்நாட்டுக்கு வரவைத்து, இங்குள்ள இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் உள்ளூரிலேயே நல்ல வேலை கிடைக்கும் சூழலையும் உருவாக்கியுள்ளது. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்று அறிவித்த மோடி, எத்தனை பேருக்கு வேலை தந்தார் என்பதை தமிழிசை சொல்வாரா?

**...வினா தொடரும்.**

---

## கருவூலம்

### போராட்டத்துக்குத் தலைமைக் கழக அனுமதி!

1964-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் வடிவமாக குடியரசு நாளை, 'துக்க நாள்' என அறிவித்து, அறப்போரை நடத்தியது கழகம். ஆயிரம் இடங்களில் மட்டும் 'துக்க நாள்' அறப்போரை நடத்த, தலைமைக் கழகம் அனுமதி அளித்தது. பேரூர், சிற்றூர்களில் இருந்தும் துக்கநாள் அறப்போர் நடத்த அனுமதி கேட்டதால், தலைமைக் கழகத்துக்கு முன்னதாக எழுதி, அனுமதி பெற்றுக்கொள்ளும் இடங்களுக்கு மட்டுமே வாய்ப்பு தரப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131